# <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.169/2025</u>** **தேதி.**21.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 21.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.சரஸ்வதி |
| த/பெ. | திரு.விக்டோபர் ராவ் |
| வயது | 71/2026 |

துவக்க நேரம் 12.40 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எதற்காக இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் அனைவரும் கூட்டுகுடும்பமாக இருந்தார்கள். வாதியின் தகப்பனார் கிருஷ்ணகிரியில் உள்ள வீட்டை விற்றுவிட்டு பக்கத்தில் ஒரு இடத்தை வாங்கினார், அந்த இடத்தில் ஒரு வீட்டை கூட்டாக சேர்ந்து கட்டினார்கள். தற்பொழுது அதை தரமுடியாது என்று சொல்கிறார்கள். கிருஷ்ணகிரியில் உள்ள இடத்தை யார் பெயரில் வாங்கினார் என்றால் குமார் பெயரில் வாங்கினார்.

2. பத்திரத்தை குமார் பெயரில் வாங்கியதாக நான் சொல்லும்நிலையில், பத்திரம் குமார் பெயரில் வாங்கப்பட்டதா அல்லது எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் எனது தகப்பனார்தான் குமார் பெயரில் வாங்கியதாக சொன்னார். 1 ம் பிரதிவாதியான எனது அண்ணனும், குமார் பெயரில்தான் வாங்கியதாக சொன்னார். எனது தகப்பனார் உண்மையில் அந்த இடத்தை வாங்கியிருந்தால், எனது தகப்பனார் பெயரில்தான் வாங்கியிருப்பார் என்றாலும், குமாரும், 1 ம் பிரதிவாதியான பாபு வெங்கட்ரமன ராவ் ஆகிய இருவரும்தான் வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல.

3. இந்த வழக்கின் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். சுலோச்சனா பாய், லட்சுமி, லதா ஆகிய மூவரும் என் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வாதி அழைத்ததால்தான் நான் நீதிமன்றத்தில் வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் என்னையும், எனது சகோதரிகளையும் தரப்பினர்களாக சேர்க்காமல் இருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் எங்களுக்கு எந்த பாகமும் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். என்னுடன் பிறந்த மற்ற சகோதரிகளும் பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. எனது அப்பா இராணிப்பேட்டையில், சொத்து வாங்கியதான நான் சொல்லும்நிலையில் அந்த சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் இராணிப்பேட்டையில் வேலு முதலி தெருவில் உள்ளது. இராணிப்பேட்டையில் உள்ள சொத்து எனது அப்பா சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால் ஆமாம். தாவாவில் உள்ள கிருஷ்ணகிரியில் உள்ள சொத்தானது, ஆரணியில் உள்ள சொத்தை விற்றுதான் தாவா சொத்தை வாங்கியதாக நான் எனது எழுத்துமூல சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும், கிருஷ்ணகிரியில் உள்ள தாவா சொத்து எனது தகப்பனாரால் வாங்கப்படவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதியும், இறந்துபோன குமார் ஆகிய இருவரும்தான் தாவா சொத்தை வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

5. எனது தகப்பானர் ஒரு உயில் எழுதியதாக நான் சொல்லும்நிலையில், அந்த உயிலை எந்த வருடம் எழுதினார், எங்கு எழுதினார் என்றால் என்னுடைய திருமணத்திற்கு பிறகு எழுதினார், ஆனால் குறிப்பாக எப்பொழுது எழுதினார் என்று ஞாபகம் இல்லை. இந்த உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றாலும் எனது சகோதரர்கள் சாட்சி சொல்ல அழைத்ததால் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு பாகப்பிரிவினைக்கான வழக்கு இல்லை என்றாலும், தாவா சொத்து 1ம் பிரதிவாதி மற்றும் இறந்துபோன குமார் ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், வாதி கோரியதுபோல் 3/5 பாக உரிமை பெற வாதிகளுக்கு உரிமை இல்லை

என்றாலும் எனவே தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 1.00 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.